

# கனவுகளும் கண்ணியமும்: மலையகத் தமிழ் இளைஞர்களின் கதைகள்

## அறிமுகம் :

குடியேற்றவாத யுகத்தின்போது பெருந்தோட்டங்களில் பணி புரிவதற்காக இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட தென்னிந்தியத் தமிழர்களின் ஆரம்பகால வருகைகளாக வரலாற்றில் பதியப்பட்டுள்ள 1823ஆம் ஆண்டின் வருகைகள் நிகழ்ந்து இந்த 2023ஆம் ஆண்டுடன் 200 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. அவர்கள் முதலில் கோப்பித் தோட்டங்களில் வேலை செய்வதற்காக பிரித்தானிய குடியேற்றவாதிகளால் இங்கு கொண்டுவரப்பட்டனர். கோப்பித்தோட்டங்களின் தோல்வி இன்று வரை தொடரும் தேயிலைப் பயிர்ச்செய்கைக்கு வழிவகுத்தது. இந்த சமூகம் இலங்கைக்கு வந்ததிலிருந்து, அவர்களின் சந்ததியினரின் நான்கு தலைமுறையினர் வரை இலங்கை தீவையே தமது நாடு என என்று அழைத்து வந்தனர்.

மலையக அல்லது மலைநாட்டுத் தமிழ் சமூகம் தேயிலை பெருந்தோட்டங்களிலேயே தொடர்ந்தும் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் இதுவரை அரசாங்கத்தின் பிரஜாவுரிமை மறுப்புக்கும், பெருந்தோட்டத்துறை முதலாளித்துவத்தின் சுரண்டலுக்கும் ஆளாகியுள்ளனர். அதேநேரத்தில், அவர்கள் தமது சமூகத்தின் அடையாளத்தை உருவாக்கியுள்ளதோடு, தமது வாழ்க்கைத்தரத்தில்

ஊதிய அதிகரிப்பு மற்றும் கௌரவத்திற்காக தொடர்ந்தும் போராடிக்கொண்டிருக்கின்றனர்.

மலையகத் தமிழர்கள் எப்போதுமே தோட்டங்களில் வேலை செய்வதற்குப் பதிலாக நகரங்களில் சிறந்த வேலை வாய்ப்புகளைத் தேடி வருகின்றனர். எவ்வாறெனினும், கடந்த ஒரு தசாப்தத்துக்கும் மேலாக தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைவடைந்துள்ளது. தொழிலாளர்கள் பற்றாக்குறையால் கூலியை உயர்த்த முடியவில்லை என்றும் முதலாளிகள் கூறுகின்றனர்.

இந்த புலம்பெயர்வு ஒரு முக்கியமான யதார்த்தத்தை பிரதிபலிக்கிறது. அதாவது, பெருந்தோட்டங்கள் தொழில்வாய்ப்புக்கும் மற்றும் சமூக முன்னகர்வுக்கும் ஏற்றதொரு தளம் அல்ல. இந்த ஆய்வில் பங்குபற்றியவர்கள் தமது கனவுகளை மற்றும் அபிலாஷை களை - மற்றும் பலரது கனவுகளை - பெருந்தோட்டத்துறைக்குள் நனவாக்க முடியாது என்று குறிப்பிட்டனர். தங்களுக்கு முந்தைய தலைமுறையினர் மிகவும் குறைந்த கூலிக்காக கடினமான உடலுழைப்பில் ஈடுபட்டதையும், பல தசாப்தங்களாக அவர்களது சமூக-பொருளாதார நிலையில் சிறிய மாற்றங்களையே காண முடிந்ததையும் அவர்கள் கண்கூடாக அறிந்துள்ளனர். இதன் விளைவாக பலர் புதிய எதிர்காலத்துக்கு உதவக்கூடிய தொழிலை அல்லது கல்வியை நாடுகின்றனர்.

வரலாற்று சிறப்புமிக்கதொரு தருணமும் அவர்கள் தமது எதிர்காலத்தை வடிவமைக்கும் முக்கியமான திருப்புமுனையுமான இச்சந்தர்ப்பத்தில் சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை நிதியத்தின் (Law and Society Trust) இந்த ஆவணப்படுத்தலானது இச் சமூகத்தின் நிலைமையைப் பிரதிபலிப்பதற்கு உதவ எதிர்பார்க்கிறது,

இலங்கையின் வரலாற்றின் போக்கை மோசமான மற்றும் சக்திவாய்ந்த வழிகளில் வடிவமைப்பதில் இளைஞர்களின் கனவுகளும் இலக்குகளும் பெரும் பங்காற்றியுள்ளன. மலையகத் தமிழர்களது மூதாதையர்கள் இந்த தீவுக்கு வந்து இரண்டு நூ ற்றாண்டுகள் கடந்துள்ள நிலையில் இந்த ஆய்வானது, இந்தத் திட்டம் மலையகத் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்களின் குரல்களில் கவனம் செலுத்துகிறது. இது தீவின் தேயிலை வளரும் பிரதேசங்களில் உள்ள மலையகத் தமிழ் இளைஞர்களின் அனுபவங்களையும் அபிலாசைகளையும் சேகரிக்கிறது.

இந்தப் பிராந்தியங்கள், மாவட்டங்கள் அல்லது மாகாணங்களின் நிர்வாக எல்லைகளை குறிக்க வேண்டுமென எந்தக் கட்டாயமும் இல்லை. மாறாக, ஒவ்வொரு பிரதேசத்திலும் பயிரடப்படும் விசேட தேயிலை வகைகளை வேறுபடுத்தி காட்டுவதற்காகவே பயன்படுத்தப்படுகின்றன. இளம் பேச்சாளர்கள் தாம் எதிர்கொண்ட சவால்கள் பற்றிப் விவரித்தாலும், தொடர்ச்சியாக ஒரு முறைமையில் மறுக்கப்படும் சமூகத்தின் கண்ணியம் மற்றும் உரிமைகளுக்கான தேவையை அவர்கள் முக்கியமாக பிரதிபலிக்கிறார்கள்.

### திம்புல பிராந்தியம்

**மஸ்கெலியா கவரவில மற்றும் அப்கோட்**

தேயிலை பயிரடப்படும் பிரதேசங்களின் வரைபடத்தின் புவியியல் மையத்தில் அமைந்துள்ள மஸ்கெலியா, நாட்டின் மிக உயரமான இடங்களில் சில தேயிலைத் தோட்டங்களைக் கொண்டுள்ளது.

### கண்டி பிராந்தியம்

**மெதமஹநுவர**

கண்டியில் உள்ள தெல்தோட்டை பிரதேசத்தில் பிரித்தானிய பெருந்தோட்ட முயற்சியாளர் ஜேம்ஸ் டெய்லர் என்பவரால் 1867 இல் தேயிலை பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்ட இலங்கையின் மிகப் பழமையான வியாபார ரீதியான பெருந்தோட்டமான லூ ல்கந்துறை அல்லது லூல்கந்துர பெருந்தோட்டம் அமைந்துள்ளது.

### சபரகமுவ பிராந்தியம்

**தெரணியகல - மியனவிட**

இந்த மாகாணத்தில் உள்ள பல நகரங்கள் மற்றும் தொழிற்துறை மையங்களுக்கு அருகில் அமைந்துள்ள இப்பிரதேசங்களில் வசிக்கும் இளைஞர்களால் பெருந்தோட்டத்தில் அமைந்துள்ள தமது வீடுகளிலிருந்து வேலைக்காக தினமும் வந்து செல்ல முடிகிறது.

### ருஹுணு பிராந்தியம்

**தெனியாய**

இந்தப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள பெருந்தோட்டங்கள் ஏனைய பிரதேசங்களைப் போலன்றி சிங்களப் பெரும்பான்மை நகரங்களால் சூழப்பட்டுள்ளன. இதன் விளைவாக, இளைய மலையக இளைஞர்களுக்கும் சிங்கள மொழி பேசும் மாணவர்களுக்கும் அவர்தம் வகுப்பறைகள் மட்டத்தில் அதிக தொடர்பு உள்ளது.

### ஊவா பிராந்தியம்

**பண்டாரவளை - பூனாகலை**

இலங்கையில் மண்சரிவுகளுக்கு அதிக வாய்ப்புள்ள மாகாணத்தில் அமைந்துள்ள இப்பிரதேசத்தில் வசிப்பவர்கள் சீரற்ற காலநிலையின்போது தமது வீடுகளின் பாதுகாப்பு தொடர்பில் அதிக அபாயங்களை எதிர்கொள்கின்றனர்.

நீண்டகாலமாக காணி உரிமைகள் மற்றும் தமது சமூகம் எதிர்கொள்ளும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பில் ஈடுபட்டி சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை நிதியத்துடன் [LST] இணைந்து செயற்பட்டு வரும் இந்த பெருந்தோட்டங்கள் மற்றும் பிராந்தியங்களில் பணிபுரியும் சமூக மைய நிறுவனங்களாலேயே இந்த ஆய்வு சாத்தியமானது. இந்த அமைப்புகள் அவர்களது வட்டாரத்தில் உள்ள மலையகத் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்களுடன் தொடர்பு கொள்வதில் ஆய்வாளர்களுக்கு உதவின.

இந்த ஆவணப்படுத்தலுக்காக, சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை நிதியம் [LST] 16 முதல் 21 வரையான வயதெல்லைக்கு உட்பட்ட ஒருவருக்கொருவர் வேறுபட்ட பயணங்களைக் கொண்ட இளைஞர்களிடம் பேசியது. சிலர் தமது பாடசாலைக் கல்வியின் இறுதிப்பரீட்சைக்கு தோற்றுபவர்களாக இருந்தனர். இன்னும் சிலர் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிப்பவர்களாக அல்லது பல்கலைக்கல்வியை தொடங்குபவர்களக இருந்தனர். ஏனையோர் ஏற்கனவே பெருந்தோட்டத்துக்கு வெளியே பணிபுரிந்து கொண்டிருந்தனர். இலக்குக் குழுக் கலந்துரையாடல்கள் மூலம், கல்வி, தொழிவாய்ப்பு, எதிர்கால அபிலாசைகள் மற்றும் அவர்களது சூழமைவில் இவற்றை அடைவதில் உள்ள தடைகள் குறித்து ஆய்வாளர்கள் அவர்களுடன் கலந்துரையாடினர்.

கல்வி மற்றும் தொழில் விடயங்களில் தற்போதைய நிலைமைகள் மற்றும் எதிர்கால அபிலாசைகளை ஆராயும் பொருட்டு பல்வேறு தலைப்புகளின் கீழ் உரையாடல்கள் நிகழ்த்தப்பட்டன. இந்தக் கலந்துரையாடல்களிலிருந்து வெளிப்படும் பிரச்சினைகள் பல வழிகளில் ஒன்றுடனொன்று இடையீடு செய்கின்றன. இந்த ஆவணமானது இளைஞர்களது எதிர்வினைகளிலிருந்து வெளிப்பட்ட முக்கிய தொனிப்பொருள்களை வகைப்படுத்தியுள்ளது.



# பாடசாலைக் கல்வி

மலையகத் தமிழ் இளைஞர்களைப் பொறுத்தவரையில் ஆரம்ப காலந்தொட்டே கல்வி ஒரு சவாலாக இருந்து வந்துள்ளது. கல்வித்துறையில் அரச செலவினங்கள் மிகவும் குறைவாக உள்ளமை பெருந்தோட்டங்களில் அமைந்துள்ள பாடசாலைகளிலேயே அதிகளவில் காணக்கூடியதாகவுள்ளது. இந்தப் பிரதேசங்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் வசதிகள், பாடத்திட்டம் மற்றும் நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர் ஆளணி ஆகியவற்றில் நிலவும் பற்றாக்குறை போன்ற விடயங்கள் அவர்களது அன்றாட வாழ்வில் இது எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றன என்பதை பேச்சாளர்கள் எழுப்பும் கேள்விகள் நன்கு படம்பிடித்துக் காட்டுகின்றன. அவர்களது எதிர்காலத்தை வடிவமைப்பதிலும் அது மிகவும் முக்கியமானது.

பேச்சாளர்கள் போக்குவரத்து வசதி முதல் பாடசாலையின் உள்ள வசதிகள் வரை உரையாடினர். மக்களில் ஒரு சிலரே எதிர்கால அபிலாசையை நிறைவேற்றுவதற்காக கல்வியைத் தொடர்கின்றனர் என்பதை பேச்சாளர்கள் குறிப்பிட்டனர். ஒரு தசாப்தத்திற்கு முன்பிருந்ததை விட அதிகமான மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குச் செல்வது உணரப்பட்டபோதும், அவர்களுள் அதிகமானவர்கள் வருமானம் ஈட்டுவதற்காக தொழில் செய்வதையே தெரிவு செய்கின்றனர்.

போக்குவரத்து பிரச்சினைகள் பாடசாலைக்கான அணுகலுக்கு கடுமையானதும் தொடர்ச்சியானதுமான தடங்கலாக உள்ளன. பாடசாலைக்குச் செல்வதற்கான செலவு என்பது அவர்களுக்கு அருகிலுள்ள பாடசாலைக்கும் அவர்களால் வீடு என அழைக்கப்படும் தோட்டங்களில் உள்ள லயன் அறைகளுக்கும் இடையிலான அபரிமிதமான தொலைவிலிருந்து தொடங்குகிறது. பரீட்சை காலங்களில் இந்த தொலைவு என்பது ஒரு குறிப்பிடத்தக்க சவாலாக காணப்படும்.

அவர்கள் பெரியவர்களாக வளரும்போது அவர்களுக்கு அருகிலுள்ள பெருந்தோட்டப் பாடசாலைகள் பெரும்பாலும் க.பொ.த (உயர்தரம்) வரை வகுப்புகளைக் கொண்டிராததால், சிலர் நகரங்களில் உள்ள பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டியிருக்கும். இதனால் பெற்றோருக்கு பேருந்து அல்லது முச்சக்கர வண்டிக்கான கட்டணங்களை ஈடுகட்ட கூடுதல் செலவை ஏற்படுத்தும்.

நடத்துநர்கள் பெருந்தோட்டங்களிலிருந்து செல்லும் மாணவர்களை பேருந்தில் ஏற்றிக்கொள்ள விரும்புவதில்லை என்பதால் பேருந்தை பயன்படுத்த முயற்சிப்பது மிகவும் நம்பகத்தன்மையற்றதாகக் காணப்படும். ஏனெனில், அவர்களது பருவகால பயணச்சீட்டுகளினால் மற்ற பயணிகளிடமிருந்து கிடைக்கும் இலாபத்தை ஈட்டமுடிவதில்லை.

“

**பெருந்தோட்ட லயன் அறைகளுக்கு மிக அண்மையில் அமைந்துள்ள பேருந்து தரிப்பிடம் ஒரு திசையில் முப்பது நிமிட நடைப்பயணமாகும். பாதைகள் சேதமடைந்து கிடப்பதால் முச்சக்கர வண்டிகளை செலுத்த முடியாத நிலையில் நடந்தே செல்வதை தவிர வேறு வழியில்லை.**

- பூனாகலை -

கண்டியைத்தாண்டி அமைந்திருக்கும் மெதமஹனுவரவில், மாணவர்கள் பிரதான வீதிக்கு 3 கிலோமீற்றர் தூரம் நடந்து, பின்பு பஸ்ஸில் ஏறி பாடசாலைக்குச் செல்ல வேண்டும். அவ்வப்போது அவர்கள் தமது வீடுகளில் இருந்து பிரதான வீதிக்குச் செல்வதற்கு முச்சக்கர வண்டியை ஏற்பாடு செய்ய முடியுமெனினும் அதற்கான செலவுகள் அதிகரிக்கலாம். குறிப்பாக மழை பெய்யும் போது. பாடசாலையில் சீரான கற்பித்தல் இல்லாமை அல்லது சமூக எதிர்பார்ப்பு காரணமாக பிரத்தியேக வகுப்புகளில்

கலந்து கொள்வதற்காக சில மாணவர்கள் திகன (21 கி.மீ. தூரம்) அல்லது கண்டி (38 கி.மீ. தூரம்) வரை பயணிக்கின்றனர். அத்துடன், கல்வி மற்றும் ஏனைய கட்டணங்களுக்காக நிறைய செலவாகும் நிலையில் பெற்றோரின் சம்பளம் போதுமானதாக இல்லாததால், இந்த செலவுகளை ஈடுகட்ட சிலர் கடன் வாங்கத் தலைப்பட்டுள்ளனர்.

இந்தப் பகுதியில் பதிலளித்தவர்கள் போதிய இணைப்பு இல்லாததையும் குறிப்பிட்டனர். மலையின் உச்சியில் உள்ள பைன் காடுகளில் தொலைபேசிகளுக்கான தெளிவான சமிக்ஞையைப் பெறலாம். தரையில் இரத்தம் உறிஞ்சும் அட்டைகள், காணப்படுகின்றன. அத்துடன் காட்டுப்பன்றிகளும் இப்பகுதிக்கு அடிக்கடி வருவதாக அறியப்படுகிறது. எனவே, மாணவர்கள் மாலை 5 மணிக்குப் பிறகு ஏற்பாடு செய்யப்படும் எந்தவொரு வகுப்பையும் தவிர்க்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

பாடங்களுக்கான வரையறுக்கப்பட்ட அணுகல் தொடர்பிலும் பங்கேற்பாளர்களால் விசேடமாகக் குறிப்பிட்டனர். தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் தமக்கு இயலுமான அல்லது தமக்கு ஆர்வமுள்ள பாடங்களை வழங்குவதில்லை என அவர்கள் கூறினர். இதனால் அவர்களுக்குப் பிடிக்காத அல்லது அவர்கள் திறமையை வெளிக்காட்டாத பாடங்களை கற்க நேர்கிறது. இதன் விளைவாக, பலர் தமது உயர்தர வகுப்புகளுக்கு பாடங்கள் மற்றும் ஆசிரியர்களின் இருப்பைக் கருத்திற்கொண்டு, நகரங்களுக்கு அருகில் உள்ள

'பெரிய பாடசாலைகளில்' சேர்ந்து கற்க வேண்டிய நிலை காணப்படுகிறது. பாடங்களுக்கான வரையறைக்குட்பட்ட அணுகல் அரச பல்கலைக்கழகங்களில் சேருவதற்கான அவர்களது இயலுமையை மேலும் தடுப்பதோடு அவர்களது தொழில்வாய்ப்பு தெரிவுகளையும் குறைக்கிறது.

இப்பிரதேசத்திலுள்ள தமிழ் மொழிப் பாடசாலைகளில் கற்பிக்க ஆசிரியர்கள் இல்லாதது பெருந்தோட்டங்களைச் சூழவுள்ள பாடசாலைகளிலும் வளர்ந்து வரும் ஒரு பிரச்சினையாக உள்ளது. பல வகுப்புகளில் ஆசிரியர்கள் இல்லாமை காரணமாக பெற்றோர்கள் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பும் செலவு வீண் செலவு எனக் கருதுவதால், இது மாணவர்களை பாடசாலைக் கல்வியை விட்டும் வெளியேற மறைமுகமாக நிர்ப்பந்திக்கிறது.

"

**சிங்கள பாடசாலைகளுடன் ஒப்பிடும்போது இப்பிரதேசத்திலுள்ள தமிழ் பாடசாலைகளில் பாடசாலை மைதானங்கள் மற்றும் வெளிப்புற செயற்பாடுகள் போன்ற வசதிகள் குறைவாகவே காணப்படுகின்றன. சில நேரங்களில் வகுப்பறை இட வசதி போன்ற அடிப்படை விடயங்களிலும் கூட இதே நிலை காணப்படுகிறது.**

- மெதமஹநுவர -

உதாரணமாக, இத்தோட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் கல்வி கற்கும் மெதமஹனுவர பாடசாலையில், தரம் 1 முதல் 11 வரையான வகுப்புகள் ஒரே கட்டிடத்திற்குள்ளேயே அமைந்துள்ளன. சீரற்ற காலநிலை காரணமாக அவர்களது பாடசாலை பலத்த சேதத்தை எதிர்கொண்டபோது, அவர்கள் தற்காலிகமாக உள்ளூர் சிங்கள பாடசாலை ஒன்றின் கட்டடத்தில் தங்க வைக்கப்பட்டனர். ஒரு மாதத்திற்குள் அவர்கள் தங்கள் சொந்த பாடசாலைக்குத் திரும்பியபோது, அது இன்னும் பழுதுபார்க்கப்படாமல் இருப்பதை அவதானித்தனர்.

பண்டாரவளையில் உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளைப் பெற்றுள்ள சில மாணவர்கள் இந்த நிலையை அடைவது கூட எவ்வளவு சிரமமாக உள்ளது என்பது குறித்துப் பேசினர். அவர்களுக்கு அண்மித்த பாடசாலைகளில் வணிக மற்றும் கலைப்




பிரிவுகளில் மட்டுமே உயர்தரக் கல்வியை வழங்குகின்றன. இது மாணவர்களின் உயர்கல்விக்கான தெரிவை கடுமையாகக் கட்டுப்படுத்துகிறது. விஞ்ஞானம் அல்லது கணிதப்பிரிவில் கற்க விரும்புவோர் 17 கிலோமீற்றர் பயணம் செய்து பண்டாரவளை நகருக்குச் செல்ல வேண்டும்.

உள்ளூர் பாடசாலையில் சாதாரண தர வகுப்பில் 85 மாணவர்கள் வரை இருந்த நிலையில், உயர்தர வகுப்பில் 21 மாணவர்கள் மாத்திரமே இருந்ததாக இந்த மாணவர்கள் குறிப்பிடுகின்றனர். ஏனைய பாடங்களைத் தொடர நகருக்குச் செல்லும் மாணவர்கள் மற்றும் பாடசாலை இடைவிலகல்கள் காரணமாக எண்ணிக்கையில் இந்தப் பாரிய வீழ்ச்சி ஏற்படுகிறது.

மலையகத் தமிழ் மாணவர்களுக்கு விளையாட்டு மற்றும் புறக்கிருத்தியை செயற்பாடுகளுக்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகல் ஒரு தீராத பிரச்சினையாக இருந்தது. பாடசாலைகளில் வசதிகள் இல்லாததால், விளையாட்டைத் தீவிரமாகத் தொடரவும் விளையாடவும் விரும்பும் மாணவர்களுக்கு அதற்கான வாய்ப்பு இல்லை. மிகச் சில பாடசாலைகளிலேயே முறையான அணிகளை உருவாக்கி மாணவர்களை போட்டிகளில் கடந்து கொள்ளச் செய்வதற்கான வாய்ப்பு உள்ளது.

**நான் ஒரு அணியில் சேர்ந்து விளையாடவும், ஒரு பயிற்சியாளராக மாறவும் மிகவும் விரும்புகிறேன். ஆனால், அதற்கு நான் பெரிய பாடசாலைக்குச் செல்ல வேண்டும் அல்லது எனது வீட்டிலிருந்து தொலைவில் உள்ள விளையாட்டுச் சங்கத்தில் இணைய வேண்டும். நான் கடினமாக முயற்சி செய்வதற்கு திடசங்கற்பத்துடன் இருந்தாலும் நான் இந்தப் பாதையை பின்பற்ற எனக்கு எந்த எளிய வழிகளும் இல்லை.**

- தெனியாய -

அவர்கள் சீருடைகள் மற்றும் உபகரணங்கள் போன்ற செலவினங்களையும் பூர்த்தி செய்துகொள்ள வேண்டும். பாடசாலைகளுக்கு அதில் ஈடுபடக்கூடிய திராணி இல்லை என்பதால் அனைத்துக்கும் தனிப்பட்ட முயற்சிகளையே மேற்கொள்ள வேண்டும். பெரும்பாலான மாணவர்களுக்கு அவர்களது வீட்டுப் பொறுப்புகள் காரணமாக புறக்கிருத்தியைச் செயற்பாடுகளில் தொடர்ந்து ஈடுபடுவது என்பது ஒரு கடினமான காரியம் ஆகும்.

பண்டாரவளையில் பதிலளித்தவர்கள் கிரிக்கெட் விளையாட விரும்பும் மாணவர்கள் பலர் இருப்பினும் அவர்களுக்கு வாய்ப்பு இல்லை என்று கூறினர். அவர்கள் மலையகத் தமிழ் சமூகத்தில் இருந்து வந்தவர்கள் என்பதனாலேயே வசதிகள் மறுக்கப்படுகின்றன என அவர்கள் கருதுகின்றனர்.

கண்டியிலுள்ள உள்ளூர் பிரதேச சபை இளைஞர் குழுக்கள் பெருந்தோட்டங்களில் இருந்து வரும் பிள்ளைகளுடன் மிகவும் நியாயமான அல்லது நேர்ப்பாங்கான முறையில் புழங்குவதில்லை என்று பதிலளித்தவர்கள் குறிப்பிட்டனர். அரிதாக சில செயற்பாடுகளில் அவர்களுக்கு கலந்துகொள்ளும் வாய்ப்பு வழங்கியிருந்தாலும் அச்சமூகத்தின் மீது மிகவும் குறைவான கவனமே செலுத்தப்படுகிறது.

# பல்கலைக்கழகம்

பதிலளித்த பலர் உயர் கல்வியைத் தொடர முடிவு செய்து கலை மற்றும் வணிகம் போன்ற துறைகளில் கற்க வெவ்வேறு பல்கலைக்கழகங்களில் அனுமதி பெற்றிருந்திருந்தனர். அதனூடாக தாம் நல்ல தொழில்களைப் பெற முடியுவதோடு முந்தைய தலைமுறைகளை விட அதிக வருமானம் ஈட்ட முடியும் என்பதாலேயே தமது பெற்றோர் தமக்கு நன்கு கற்பிக்க வேண்டும் என்று விரும்புவதாக அவர்கள் கூறினர்.

தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியும் அவர்களது பெற்றோர் மற்றும் ஏனைய தொழிலாளர்களின் சம்பாத்தியம்



குடும்பம் அன்றாடம் வாழ்வதற்கு மட்டுமே போதுமானதாக இருக்கும். அதில் அவர்களுக்கு சேமிப்புக்கான வாய்ப்பு இல்லை. பல்கலைக்கழகத்துக்குச் செல்லும் இளைஞர்கள் நான்கு ஆண்டுகளுக்கும் மேல் கல்வி கற்பதற்கான மேலதிக செலவுகள் குறித்து விசனம் தெரிவித்து இது சரியான தேர்வா என்று கேள்வி எழுப்பினர்.

பல்கலைக்கழகக் கல்வியைத் தொடரும் மலையக இளைஞர்களுக்கு தமிழ் மொழி

மூலமாக பல்கலைக்கழகக் கல்வியைப் பெறுவதும் ஒரு குறிப்பிடத்தக்க பிரச்சினையாக இருந்தது.

தெரணியகலவில், பல்கலைக்கழகத்தில் அனுமதி பெறுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்தவர்கள் அல்லது ஏற்கனவே அனுமதி பெற்றவர்கள் ஏனைய வளாகங்கள் தமிழ் மொழியில் தாம் தெரிவு செய்யும் பாடநெறிகளை வழங்குவதில்லை என்பதால் கிழக்கு மாகாணத்திலோ அல்லது யாழ்ப்பாணத்திலோ உள்ள சில பல்கலைக்கழகங்களையே தேர்ந்தெடுத்துள்ளனர்.

மஸ்கெலியாவில் பதிலளித்தவர்கள் வடக்கு மற்றும் கிழக்கில் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளின் நிலைமையை தமது மாவட்டம் மற்றும் ஏனைய தோட்டங்களின் நிலைமையுடன் ஒப்பிட்டனர். மலையகத் தமிழ் மாணவர்களுடன் ஒப்பிடும் போது அந்தப் பிரதேசங்களிலிருந்து கணிசமான எண்ணிக்கையிலான மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறுகின்றனர்.

ஒரு முக்கியமான பிரச்சினை யாதெனில், மாணவர்கள் பாடசாலையில் கல்வி கற்று இறுதிப் பரீட்சைகளுக்குத் தோற்றியதன் பின்னர் அவர்கள் எந்த வழிகளைப் பின்பற்றுவது என்பது குறித்து அவர்களுக்கு வழிகாட்டவோ, அவர்கள் முன்னால் உள்ள தெரிவுகளை வழங்கவோ, அவர்களுக்குக் கிடைக்கும் தெரிவுகளைப் பற்றி அவர்களுக்குத் தெளிவூட்டவோ ஆசிரியர்களோ அல்லது ஆலோசகர்களோ இல்லாமை ஆகும். உதாரணமாக, உள்ளூர் தொழிற்பயிற்சி நிறுவனங்களில் மாணவர்களுக்கு பல இலவச பாடநெறிகள் இருப்பினும் அவற்றைப் பற்றி மாணவர்களிடையே போதுமான விழிப்புணர்வு இல்லை.

**“**

**பல்கலைக்கழகங்கள் வெகு தொலைவில் அமைந்துள்ளதால் சில சமயங்களில் எம்மை பல்கலைக்கழகத்திற்கு அனுப்ப எங்கள் பெற்றோர்கள் பயப்படுகிறார்கள். மத்திய மலைநாட்டுக்குள் பெருந்தோட்டங்களுக்கு மிக அண்மையில் முழு வசதிகளுடன் கூடிய அரச பல்கலைக்கழகங்கள் அமைக்கப்பட்டால் அது பெரும் உதவிகரமாக இருக்கும்.**

\- மஸ்கெலியா -

பல்கலைக்கழகத்துக்குச் சென்று உயர்கல்வியைத் தொடர்வது குறித்து மலையகத் தமிழ் இளைஞர்கள் பல்வேறு உந்துதல்களை வெளிப்படுத்தினர்.

தெரணியகலவில், பல்கலைக்கழகப் பட்டம் அல்லது உயர்கல்வித் தகைமைக்கான பாதையைத் தெரிவு செய்தவர்கள் சிறந்ததொரு தொழில்வாய்ப்பைப் பெறுவதற்காக தமது கற்கைநெறிகளில் சித்தியடைய வேண்டும் எனக் கூறுகின்றனர். இல்லையெனில், தமது கிராமத்தில் உள்ளவர்கள் ‘இவ்வளவு செலவு செய்தும் ஏன் இவர்கள் நன்றாகப் படிக்கவில்லை’ எனச் சொல்வார்கள் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

> **நான் ஏன் பரீட்சைக்குத் தோற்றுகிறேன் என்று என் உறவினர்கள் தொடர்ந்து கேள்வி எழுப்புகிறார்கள். இப்போது நான் சிறப்பாகக் கற்று சித்தி பெற வேண்டும் என உணர்கிறேன். இல்லையெனில் நான் கல்விக்காக நேரத்தையும் எனது குடும்பத்தின் பணத்தையும் வீண் விரயம் செய்துவிட்டேன் என்று அவர்கள் கூறுவார்கள்.**
>
> \- கலஹா -

மஸ்கெலியாவைச் சேர்ந்த இளைஞர்கள் இந்தப் பாதையில் செல்வதன் மூலம் சமூகத்தில் தாம் ஏற்படுத்தக்கூடிய செல்வாக்கை நன்கு உணர்ந்துள்ளனர். அவர்கள் கல்வியைத் தேர்ந்தெடுத்தால், மக்கள் அதைப் பின்பற்றுவதற்கான ஊக்கமாக எடுத்துக் கொள்வதோடு அது மேலும் கற்றலுக்கு வழிவகுக்கும் என்று அவர்கள் கருதுகின்றனர்.

தெரணியகலவில் நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்ட சில இளம்பெண்கள், தாம் கல்வியைத் தொடர முடிவு செய்தபோது "பெண்கள் படிக்கத் தேவையில்லை" என்று தங்களுக்குத் தெரிவிக்கப்பட்டதாகக் கூறினர். அவர்களைப் பொறுத்தவரை, பல்கலைக்கழகத்திற்குச் செல்வதற்கான தெரிவு எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கும் பொதுமைப்படுத்தல்கள் தவறானவை என்பதை நிரூபிப்பதற்கும் ஒரு வாய்ப்பாக இருந்தது.

மஸ்கெலியாவில், பலரும் தாம் சிறுவயதிலிருந்தே ஆர்வம் காட்டி வந்த ஒரு தொழிலான மருத்துவர் தொழிலைப் பெற அத்துறையில் கல்வி கற்பதற்காகப் பல்கலைக்கழகத்திற்குச் செல்வதற்குத் திட்டமிட்டிருந்தனர்.

கல்வி குறித்த பெற்றோரின் மனப்பான்மை பல இளைஞர்கள் தாம் கல்வியைத் தொடர்வதற்கான தீர்மானத்தை எடுப்பதற்கு காரணமாக அமைந்தது.



பெருந்தோட்டங்களில் பணிபுரியும் அவர்களது பெற்றோர்களில் பலரும் 'நீங்கள் எங்களைப் போல் துன்பப்படக்கூடாது', மாறாக சிறந்த மரியாதைக்குரிய தொழிலைத் தேட வேண்டும் என்று அவர்களிடம் கூறியுள்ளனர். பாடசாலையை விட்டு விலகி தொழில் புரியும் எண்ணத்தில் இருந்த மாணவர்கள் தங்கள் பெற்றோர் தம்மை அவ்வாறு செய்ய விடாமல் கல்வி தொடர்பில் ஊக்கப்படுத்தியதாகக் கூறினர்.

ஓரளவு கல்வியைப் பெற்ற பெற்றோர்கள் தமது பிள்ளைகள் கற்றுக்கொள்ள வேண்டும் என்று விரும்புவதாக பதிலளித்தவர்கள் குறிப்பிட்டனர். குறைந்த கல்வியறிவைக் கொண்ட அல்லது கல்வியறிவு இல்லாத பெற்றோரைக் கொண்ட குடும்பங்களிலும் பெற்றோர் தங்கள் பிள்ளைகள் நல்ல கல்வியைப் பெறுவதில் சமமாக ஆர்வத்துடன் இருந்தனர்.

இரு குழுக்களும் தமது வாழ்நாள் முழுவதும் பெருந்தோட்டங்களில் பணியாற்றியதோடு சில சந்தர்ப்பங்களில், அவ்வாறு வேலை செய்த கடைசி தலைமுறையாகவும் இருந்தனர். அவர்கள் உழைப்புச்சுரண்டல் முறைமையிலிருந்து தங்கள் பிள்ளைகளை மீட்டெடுக்கும் ஒரு வழியாக கல்வியைக் கண்டனர்.

பண்டாரவளையைச் சேர்ந்த பதிலளிப்பாளர் ஒருவர் தனது தந்தை மூன்று பிள்ளைகளுக்கு கல்வி கற்பிப்பதற்காக இரண்டு வேலைகளை செய்து வருவதாகக் கூறினார். அந்தத் தந்தை படிப்பைத் தொடர்ந்தால் வெளிநாட்டில் வேலை கிடைக்கும், அதன் மூலம் முழு குடும்பத்தையும் கவனித்துக் கொள்ளலாம் என்று மகனிடம் கூறியிருந்தார்.

"

**பெருந்தோட்ட நிர்வாகம் அவர்களை எப்படி 'அடிமைகளைப் போல்' நடத்துகிறது என்பதை எங்கள் பெற்றோர்கள் எங்களிடம் கூறுவார்கள். எனவே, அவர்கள் எங்களுக்கு நல்லதையே விரும்புகிறார்கள். கற்றல் சமூகத்தில் ஒரு 'நல்ல பெயரை' பெற உதவுவதோடு நமக்கு கௌரவத்தையும் வழங்கும். தலைமுறை தலைமுறையாக பெருந்தோட்டங்களில் கூலி வேலை செய்து வரும் இந்தச் சமூகத்தை சேர்ந்தவர்களை யாரும் கண்டுகொள்வதில்லை என்று அவர்கள் நினைக்கிறார்கள்.**

- மஸ்கெலியா -



# தொழில்வாய்ப்பு

பிராந்தியங்கள் அனைத்திலும் பல இளைஞர்கள் ஏற்கனவே பெருந்தோட்டத்துக்கு வெளியே வேலைகளில் ஈடுபட்டுள்ளனர் அல்லது ஈடுபடத் தயாராகி வருகின்றனர். சில சமயங்களில் தமது கல்வியைத் தியாகம் செய்கிறார்கள். எங்கள் குழுக் கலந்துரையாடல்களில் கலந்துகொண்ட எவருக்கும் பெருந்தோட்ட எல்லைக்குள் தொடர்ந்து பணியாற்றும் திட்டமோ விருப்பமோ இல்லை. குறைந்த வருமானம் மற்றும் சமூக நகர்வு காரணமாக அவர்களின் வாழ்க்கைத் தரத்தில் அதிக முன்னேற்றம் இல்லாமல் கடினமான உழைப்பில் அவர்களது பெற்றோர் ஈடுபடுவதை கண்ட அனுபவங்கள் மூலம் இது அவர்களால் பெரும்பாலும் புரிந்துகொள்ளப்படுகிறது.

தற்போது இளைஞர்கள் தங்கள் குடும்பத்துக்கு உதவக்கூடிய குறுங்கால தொழில்களில் ஈடுபடுகிறார்கள் அல்லது ஈடுபட முற்படுகிறார்கள். நீண்டகாலத்தில் அவர்கள் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் மற்றும் ஏனைய தொழில் பாதுகாப்புகளை வழங்கக்கூடிய தொழில்களில் ஈடுபட்டால் சொந்தக்காலில் நிற்க முடியும் என்று நம்புகிறார்கள்.

ஆடைத் தொழிற்சாலைகளில் பணிபுரிவது மலையகத் தமிழ் இளைஞர்களின் குறிப்பிடத்தக்க தொழில்வாய்ப்பாகக் காணப்பட்டது. ஆடைத் தொழிற்சாலைகள் தொழிலாளர்களை தீவிரமாக ஆட்சேர்ப்பு செய்வதற்கு அப்பகுதியில் உள்ள பெருந்தோட்டங்கள் மற்றும் சிறிய கிராமங்களுக்கு வருகின்றன. பெருந்தோட்டத்துக்கு வெளியே நல்ல ஊதியத்தை எதிர்பார்க்கும் இளைஞர்களுக்கு இத்தொழில்கள் ஏனைய தொழிலாளர்களுடன் சரிக்குச் சமமாக இருப்பதற்கான வாய்ப்பை அளித்தாலும், ஆடைத் தொழிற்சாலைகளில் வேலை நிலைமைகள் கடினமானவை.

தெரணியகலவைச் சேர்ந்த பலர் முன்பு அவிசாவளை மற்றும் குறிப்பாக சீதாவக்கை ஏற்றுமதிச் வலயத்தில் அமைந்துள்ள ஆடைத்

தொழிற்சாலைகளில் பணியாற்றினர். கடந்த இரண்டு ஆண்டுகளாக கொவிட் பெருந்தொற்று நிலைமை ஏற்பட்டபோது, தொழிற்சாலைகளில் நோய் பரவும் நிலைமை அதிகமாக இருந்ததன் காரணமாக அவர்கள் அந்த தொழில்களை விட்டு வெளியேற வேண்டியிருந்தது.

கண்டி, மெதமஹனுவரவில் உள்ள குறிப்பிட்ட பெருந்தோட்டத்தைச் சேர்ந்த பல இளைஞர்கள் பாடசாலைக் கல்வியை முடித்து ஆடைத் தொழிற்சாலைகளில் வேலைக்குச் செல்கின்றனர். இந்தத் தொழிற்சாலைகளின் சுவரொட்டிகள் மற்றும் ஆட்சேர்ப்போர் குறித்த தகவல்கள் அப்பகுதியைச் சுற்றியுள்ள தொலைபேசிக் கம்பங்களில் ஒட்டப்பட்டுள்ளதைக் காணலாம்.

பலரும் கண்டியில் அமைந்துள்ள கைத்தொழில் வலயம் (25 கி.மீ தொலைவில் பல்லேகலவில்) மற்றும் தெல்தெனியவில் (13 கி.மீ தொலைவில்) அமைந்துள்ள பல்வேறு தொழிற்சாலைகளிலும் தொழில்களைத் தேடிப் பெற்றுக்கொள்கின்றனர். அவர்களுக்கு ரூ. 18,000 அடிப்படைச் சம்பளமும் அதிகபட்சமாக மேலதிக நேரக் கொடுப்பனவுடன் மாதாந்தம் ரூ. 35,000 சம்பளவும் வழங்கப்படுகின்றன. இந்தத் தொழிற்சாலைகளில் பாடசாலைப் படிப்பை பாதியில் நிறுத்திய இளைஞர்கள் மாத்திரமல்லாது இப்போது கல்வி கற்றவர்களும் இந்த வேலையைத் தேர்ந்தெடுத்துள்ளனர்..

குறைந்த பட்ச அடிப்படைச் சம்பளத்தைப் பெற்றுக்கொள்வதற்காக மு.ப 7.30 முதல் வேலைகள் ஆரம்பிப்பதுடன் அது பி.ப 6.30 வரை தொடர்கின்றது. மாதத்தில் ஒரு நாள் விடுமுறை எடுத்தாலும் அதன் விளைவாக மாதாந்த வருகைக் கொடுப்பனவை இழக்கவேண்டி ஏற்படலாம். பணியாளர்கள் சுகயீனமுற்றால் அல்லது ஒரு



குறிப்பிட்ட நாளில் வேலைக்கு வருகை தர முடியாவிட்டால் அவர்கள் முகாமைத்துவத்தினருக்கு இது தொடர்பாக அறியப்படுத்த வேண்டும். 4 மாதங்கள் பணியாற்றியதன் பின்னரே ஒரு நாள் விடுமுறை கிடைக்கின்றது என்பதாக ஒரு இளம் பெண் தொழிலாளர் குறிப்பிட்டார்.

> **பெருந்தோட்டங்களில் வழங்கப்படும் சம்பளத்தை விட அதிக சம்பளம் இத்தகைய உற்பத்தித் தொழிற்சாலைகளில் தொழில்புரிவோருக்கு வழங்கப்படுகின்றது. இருப்பினும் அவர்களுக்கு குறைவான மரியாதையே கிடைக்கின்றன. தொழிலாளர்களால் ஒரு சிறிய தவறு நடந்தாலும் அவர்கள் திட்டு வாங்கவேண்டிய நிலைமை காணப்படுவதாக அறியக்கிடைத்துள்ளது**

## - மஸ்கெலியா -

தினசரி கூலி வேலையானது ஒரு பரவலான தொழில் மூலமாக காணப்படுகின்றது. இதில் மேன்பவர் பணிகள் போன்ற நாளாந்த அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும் வேலைகளும் உள்ளடங்குகின்றன. இருப்பினும், தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் அடிப்படைச் சம்பளமானது இன்னும் குறைவாகவே காணப்படுகின்றது என்பதுடன், அவர்களுக்கு போதுமான அளவு பணத்தைப் பெற்றுக்கொள்வதற்காக அவர்கள் மேலதிக நேரம் (OT) பணியாற்றவேண்டிய அவசியம் காணப்படுகின்றது.

தெரணியகலவில் குழுக்கள் தற்போது பிரதான நகரங்களான தெரணியகல மற்றும் அவிசாவளை போன்ற பகுதிகளில் தினசரி கூலி வேலைகளில் ஈடுபடுகின்றனர். இப்பகுதியானது பெருந்தோட்டப் பகுதியிலிருந்து முறையே அண்ணளவாக 8 மற்றும் 20 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. அவர்கள் அப்பிரதேசங்களில் உள்ள ஒப்பந்தக்காரர்களிடம் செயற்றிட்ட அடிப்படையில் கட்டுமாணம், தச்சு வேலைகள் மற்றும் நிறப்பூச்சு வேலைகள் போன்றனவற்றைப் பெற்றுக்கொள்கின்றனர்.

கொழும்பில் பல மலையக தமிழ் இளைஞர்களும் வேலைகளில் ஈடுபடுகின்றனர். சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடையாத அல்லது முன்கூட்டியே பாடசாலைகளிலிருந்து இடைவிலகிய இளைஞர்கள் பெரும்பாலும் வேலைகளை தேடிக் கொழும்புக்குச் செல்வதுடன் அவர்கள் அங்கு வர்த்தகப் பிரதேசங்கள் மற்றும் புறக்கோட்டை மற்றும் கைத்தொழில் பிரதேசங்களிலும் வேலை செய்கின்றனர். பெரும்பாலான குடும்பத்தினருக்கு பொருளாதார நெருக்கடி நிலைமைக்கு முகங்கொடுப்பதே முதன்மையான முன்னுரிமையாக இருப்பதனால் இவ்வாறான சந்தர்ப்பங்களில் கல்வியைத் தொடர்வது கடினமானதாகும்.

கண்டியில் 13 மற்றும் 14 வயதான சிறுவர்கள் கொழும்புக்கு வேலைகளை தேடிச் சென்றுள்ளதாக தாம் அறிந்துள்ளதாக அவர்களது சகாக்கள் தெரிவித்தனர்.

அவர்கள் அவர்களது வளரிளம்பருவத்திலேயே வேலைகளுக்குச் செல்வதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. பொருளாதாரப் நெருக்கடிகளை மையமாகக் கொண்ட குடும்பப் பிரச்சினைகளே மாணவர்கள் பாடசாலைகளை விட்டு முன்கூட்டியே இடைவிலகிச் செல்வதற்கு முக்கிய காரணமாகும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில், தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் தமது பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்புவது பெற்றோருக்கு அதிக செலவுகளை ஏற்படுத்துகின்றது. ஆகையால் அவர்களில் பலரும் இளம் பருவத்திலேயே வேலைகளுக்குச் செல்கின்றனர்.

சிலர் பாடசாலைக் கல்விச் செயற்பாடுகளில் திறன்பட ஈடுபடவில்லை என்பதனால் அவர்கள் பாடசாலைகளிலிருந்து இடைவிலகி இளம் வயதிலேயே வேலை தேடிச் செல்கின்றனர். பேசியவர்களில் சிலர் அவர்களது கல்விச் செயற்பாடுகளை தாமதப்படுத்தி அல்லது அவர்களது கல்வியை இடைநிறுத்தி வேலைக்குச் செல்வதனூடாக பெற்றுக்கொள்ளும் சம்பளத்தைக் கொண்டு அவர்களது இளம் சகோதர சகோதரிகளது கல்விச் செயற்பாடுகளுக்குரிய செலவுகளை மேற்கொள்கின்றனர். அவர்களது பெற்றோரும் தினசரி கூலித் தொழிலாளர்கள் அல்லது தொழில்களைத் தேடி வெளிநாடுகளுக்கு சென்றுள்ளவர்களாவர். சில சம்பவங்களை நோக்கும் போது 17 அல்லது 20 வயதான இளம் பருவத்திலிருந்தே சில சிறுவர்கள் அவர்கள் வேலை செய்து பெற்றுக்கொள்ளும் சம்பளத்தைக் கொண்டு அவர்களது முழுக் குடும்பத்தினருக்கும் உதவுகின்றனர்.

தமது சகோதர சகோதரிகள் அல்லது அவர்களது வயதினை ஒத்த இளம் பருவத்தினர் வேலை தேடி கிராமத்திலிருந்து நகர்ப் புறங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளதாக பண்டாரவளையில் இருந்து பேசியவர்கள் தெரிவித்தனர். இதில் இளம் பெண்கள் பெரும்பாலும் ஆடைத் தொழிற்சாலை வேலைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் மற்றும் துணிக் கடைகளில் பணியமர்த்தப்பட்டவர்கள் மற்றும் கட்டுமானத் துறையில் பணிபுரியும் இளைஞர்கள் ஆகியோர் அடங்குகின்றனர்.

“

**நாம் எமது கல்வியை தொடர்வதில் அல்லது தொழில்நுட்ப பாடநெறிகளை தொடர்வதில் விருப்பம் கொண்டிருந்தாலும் எமது குடும்பங்களில் பொருளாதார நிலைமைகளைக் கருத்தில் கொண்டு வேலைக்குச் செல்வதை தெரிவு செய்தோம்**

- கண்டி -

அவர்கள் நகர்ப் புறங்களுக்கு செல்லும்போது இத்தகைய வேலைகளை செய்பவர்களுடன் அதிகம் தொடர்பாடல்களை பேணுவதில்லை என்பதாக பேசியவர்கள் தெரிவித்ததுடன், விடுமுறைக்கு வீடுகளுக்குச் செல்லும் சமயங்களில் இளம் மாணவர்களுக்கு அவர்களது படிப்பினைத் தொடருமாறும், தம்மை பின்பற்றாதிருக்குமாறும் தெரிவிப்பதாக குறிப்பிட்டனர். பேசியவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் அவர்களது கல்விச் செயற்பாடுகளை தொடராமல், வேலை தேடி தமது தோட்டப்புறம் மற்றும் மாவட்டத்தை விட்டே வெளியேறிச் செல்லவேண்டும் என எண்ணுவதாக குறிப்பிட்டனர்.

“

**நாம் சிறுவர்களாக இருக்கும்போது எதிர்காலத்தில் வைத்தியர்கள், சட்டத்தரணிகள் அல்லது பொலிஸ் உத்தியோகத்தர்களாக வேண்டும் என நினைத்தோம். ஆனால், இந்த எதிர்பார்ப்பினை உண்மையாக்குவதற்கு எமக்கு எந்தவிதமான உதவிகளும் இல்லை. எமது குடும்பங்களின் பொருளாதார நிலைமைகள் மிகவும் பலவீனமான நிலைமையில் காணப்படுகின்றமையினால் குடும்பத்திலுள்ள ஏனையோரின் தேவைகள் தொடர்பாக கருத்தில் கொள்ளவேண்டியுள்ளது. இல்லாவிட்டால் எமது கல்விக்காக உறவினர்களில் தங்கியிருக்கவேண்டிய நிலை காணப்படுகின்றது**



## வேலை தொடர்பான அபிலாசைகள்

பல்வேறு எதிர்கால வேலை வாய்ப்புக்கள் தொடர்பாகவும் மலையகத் தமிழ் இளைஞர்கள் கருத்துத் தெரிவித்தனர். அவற்றில் எல்லா இடங்களிலும் உள்ள அரசாங்கத் தொழில்கள் முதல் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் மற்றும் தனியார் துறை வேலை வாய்ப்புக்கள் உள்ளடங்குகின்றன. அவர்களில் பெரும்பாலானவர்களுக்கு, நல்ல சம்பளமும் தமது குடும்பத்தினருக்கு உதவியாகவும் இருக்கக்கூடிய தொழில்களைப் பெற்றுக்கொள்வதே இலக்காகக் காணப்பட்டது.

அரசாங்கத் தொழில்களைப் பெற்றுக்கொள்வதே மலையகத் தமிழ் இளைஞர்களது பாரியதொரு எதிர்பார்ப்பாக காணப்படுகின்றது என்பதுடன் அது சமூக ரீதியில் சிறந்த நிலைமையாக கருதப்படும் ஒன்றாகும். தொழிற் பாதுகாப்பு மற்றும் அனுகூலங்களைக்

கருத்தில்கொண்டு அவர்கள் அரசாங்க வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என அவர்களது பெற்றோர் அவர்கள் வளரும் பருவத்தில் தெரிவித்ததாகவும் அவர்கள் கூறினர். ஒரு அரசாங்கத் தொழிலானது அவர்களுக்கு நீண்டகால பாதுகாப்பு மற்றும் ஓய்வு பெற்றதன் பின்னரான ஓய்வூதியம் போன்றனவற்றிற்கான உத்தரவாதத்தை வழங்குகின்றது. இது அவர்களது சொந்தமான தெரிவாக உள்ளதா அல்லது அவர்களது குடும்பப் பொறுப்புக்களை கருத்தில் கொண்டு தெரிவு செய்யப்பட்டவையா என்பதில் பெரும்பாலும் தெளிவற்ற நிலை காணப்படுகின்றது..

அரசாங்கம் 1 இலட்சம் வேலை வாய்ப்புக்களை வழங்கியதாகவும் அவர்களது தோட்டப் புறங்களைச் சேர்ந்த சிலரும் இதனூ டாக வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொண்டதாகவும் மஸ்கெலியாவில் பேசியவர்கள் தெரிவித்தனர். இது ஏனையோரிடமும் அவர்கள் கல்வியை தொடரவேண்டிய அவசியமில்லை எனும் எண்ணத்தை தோற்றுவித்துள்ளது. இவ்வாறாக வேலை வாய்ப்புக்கள் இலகுவாக வழங்கப்படுகின்றன எனின் நாம் ஏன் பொதுப் பரீட்சைகளுக்குத் தோற்றவேண்டும் என பரீட்சைக்குத் தோற்றியவர்கள் சிந்திக்கின்றனர்.



"அரசாங்க வேலைகளை" பெற்றுக்கொள்ளும் எதிர்பார்ப்பில் உள்ளவர்களில் எத்தனை மாணவர்கள் இராணுவம், STF அல்லது பொலிஸில் வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளவேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளனர் என்பதே தொடர்ச்சியான கருப்பொருளாக காணப்படுகின்றது. இராணுவத்தினர் தொடர்பான காணொளிகள் மற்றும் தொலைக்காட்சி ஒளிபரப்புக்களை அவர்கள் பார்வையிட்டுள்ளனர் என்பதுடன் குறித்த தொழில்களில் ஈடுபடுவது தொடர்பாக அவர்கள் கருத்தில்கொள்வதை அவை தூ ண்டியுள்ளன. இருப்பினும், இந்தத் துறையில் வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள முயற்சிப்பதில் சமூகத்திற்கு உள்ள குறிப்பிட்ட தடைகள் தொடர்பாக பலரும் பேசினர். குறிப்பாக பொலிஸ ாரிடமிருந்து இதற்கான அனுமதி அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வது கடினமான செயற்பாடொன்றாகும் என கண்டியிலிருந்து பேசியவர்கள் தெரிவித்தனர்.

**நான் ஆசிரியராக விரும்புகின்றேன். இதனூடாக கிடைக்கும் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் எனது பெற்றோரைப் பாதுகாப்பாகக் கவனித்துக்கொள்ள வழிவகுக்கும் என்பதுடன் நான் பெருந்தோட்டப் புறங்களில் பணியமர்த்தப்பட்டால், எனது சமூகத்திற்கும் என்னாலான வேலைகளை இயன்றவறை செய்ய முடியும்.**

தான் சிறு வயதிலிருந்து ஆசிரியராவதை விரும்பியதாகவும் அதுவே தனது கனவு என தனது பெற்றோரிடமும் தெரிவித்ததாகவும் கண்டியிலிருந்து கதைத்தவர் குறிப்பிட்டார். அவர் இதற்காக வழியை நோக்கி பல்கலைக்கழகம் செல்லவேண்டும் நம்பிக்கையில் இருந்ததுடன், இதற்கான பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக பரீட்சைகளில் சிறந்த முறையில் சித்தியடையவேண்டும் எனவும் உறுதியாக இருந்தார். அவரது பெற்றோரும் அவளை இதற்காக ஊக்குவிப்பதாகவும் தெரிவித்தார். பண்டாரவளை பகுதியிலுள்ளவர்கள் எதிர்காலத்தில் ஆசிரியராகும் எதிர்பார்ப்பினைக் கொண்டவர்கள் பெரும்பாலும் குறிப்பாக கலைத்துறைக்குரிய பாடங்களைக் கற்பிப்பதையே தமது விருப்பாக கொண்டிருந்தனர்.

மஸ்கெலியவில் இருந்து கதைத்தவர்கள், அவர்கள் ஆசிரியர்களாவதற்கு ஆர்வமாக இருந்தும், பல்கலைக்கழகத்தில் அனுமதி பெற்றுக்கொள்ள முடியாதவர்கள், ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரி போன்ற கல்விக் கல்லூரிகளின் சான்றிதழ்கள் போன்ற மாற்று வழிகளைக் கருத்தில் கொண்டிருந்தனர்.



வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் தொடர்பாக சில மலையகத் தமிழ் இளைஞர்கள் தீவிரமாக இருந்தனர். அவர்களில் சிலர் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்று சிறிது காலம் தொழிலில் ஈடுபட்டு நன்றாக சம்பாதித்ததன் பின்னர் அவர்களது குடும்பத்தினருக்கு உதவுவதற்காக திரும்பி வரமுடியும் என நம்பிக்கையுடன் இருந்தார்கள். மலையகத் தமிழ் இளைஞர்களது வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான தெரிவானது பெரும்பாலும் அவர்களது பெற்றோருக்கு அது தொடர்பாக உள்ள அனுபவத்திற்கமைவாகவே தீர்மானிக்கப்படுகின்றது. அவர்களில் பலரும் இது ஒரு குறிப்பிடத்தக்க வருமானமீட்டக்கூடிய தொழில் மூலமொன்றாகும் என்பதை அறிந்துவைத்துள்ளனர்.

கண்டியில், மத்திய கிழக்கில் பணிபுரியும் பெற்றோர்கள் தொடர்பாக குறிப்பிடும்போது, அங்கு தமது பெற்றோரின் வேலை எப்படியானது என்பது குறித்து தங்களுக்கு முழுமையாகத் தெரியாது, ஆனால் அது குடும்பத்திற்குப் போதுமான பணத்தை வழங்குகின்றது என்பது தங்களுக்குத் தெரியும் என்பதாகத் தெரிவித்தனர். உதாரணமாக, ஒருவர் மத்திய கிழக்கு நாட்டில் பணிபுரியும் தனது தந்தையிடம் சென்று தானும் குடும்பத்திற்கான பங்களிப்பினை வழங்கவேண்டும் என ஒருவர் கதைக்கும்போது தெரிவித்தார்.

பண்டாரவளையில் இருந்து பேசியவர்கள், அவர்களுள் பெரும்பாலானவர்களது பெற்றோர் முன்னராக பெருந்தோட்டங்களில் பணிபுரிந்ததாகத் தெரிவித்தனர். ஆனால் இப்போது அவர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை எதிர்பார்ப்பதாகக் கூறுகின்றனர். அவர்களில் பலரது தாய்மார்கள் மத்திய கிழக்கு நாடுகளிலும் வளைகுடா நாடுகளிலும் வீட்டுப் பணியாளர்களாகவும் குடும்பங்களில் பராமரிப்பாளர்களாகவும் பணிபுரிகின்றனர்.

ஒரு யுவதி கூறுகையில், தங்கள் தாய் இதுபோன்ற தொழிலில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வேலை



செய்துவிட்டு திரும்பியதாகவும், மீண்டும் செல்லத் திட்டமிட்டதாகவும், ஆனால் அவர் செல்வதற்கு முன்பு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட மருத்துவ பரிசோதனையில் கொடுக்கப்பட்ட ஊசியின் விளைவாக அவர் பக்கவாத நிலைமையை அடைந்துள்ளதாகவும் கூறினார். இதன் காரணத்தினால் நிலையான குடும்ப வருமானத்தை தக்கவைத்துக்கொள்வதற்காக தனது சகோதரன் வேலை செய்ய ஆரம்பித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதானது



சிலவேளைகளில் ஆபத்துக்களுடன் இணைந்தவையாகவே உள்ளன. இது குடும்பத்தினருக்கு சிலவேளைகளில் சுமையை ஏற்படுத்தக்கூடியதாகும். வெளிநாட்டிற்குச் வேலைக்காக செல்லும் பெற்றோர்கள் தமது பிள்ளைகள் பாடசாலைக் கல்வியைத் தொடர்வதில் பெரும்பாலும் வெளிப்படையாக உதவுகிறார்கள், ஆனால் இது சில சமயங்களில் பாடசாலைக்கு செல்வது குறைவடைவதற்கும், இடைநிறுத்தப்படுவதற்கும் காரணமாகலாம்..

தெரணியகலவில், ஒரு நபர் 'வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம்" ஒன்றின் மோசடிக்கு பலியாகியதை விவரித்தார். அவர், வேலை வாய்ப்பினைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா. 75,000 கட்டணம் செலுத்தியதாகவும், வேலைவாய்ப்புக்காக விமானப் பயணம் மேற்கொள்ளப்படவேண்டிய நாளில் அந்த அலுவலகத்திற்குச் சென்ற வேளையில் அவ்வாறான அலுவலகம் எதுவும் அந்த இடத்தில் காணக்கூடியதாக இருக்கவில்லை என்பதாக அவர் தெரிவித்தார்.

சில மலையக தமிழ் இளைஞர்கள் தனியார் துறைகளில் வேலை செய்வதில் அவர்களது ஆர்வத்தை தெரிவித்தனர். பண்டாரவளையில் பேசியவர்கள், தாம் எதிர்காலத்தில் முகாமைத்துவ மட்டத்திலான ஒரு தொழிலைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்கள். தனக்குச் சொந்தமான பயண நிறுவனம் ஒன்றினை ஆரம்பித்து அதனூடாக வீசா விண்ணப்ப சேவைகள் மற்றும் விமான டிக்கெட்டுக்கள் போன்றனவற்றை வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் சேவை ஒன்றை ஆரம்பிக்க விரும்புவதாக ஒரு மாணவர் குறிப்பிட்டார்.

மஸ்கெலியாவில், வங்கிகளில் பணியாற்றுவதனை நோக்காகக் கொண்டு பலரும் கணக்கீட்டுப்

பாடத்தைக் கற்பதைக் காணக்கூடியதாக இருந்தது. கண்டியில், ஒரு யுவதி, தனக்கு ஊடகத்தில் பணியாற்ற வேண்டும் எனும் கனவு உள்ளதாகவும் அதனை நனவாக்கிக் கொள்வதற்காக பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார். அவர் யூடியூப் மற்றும் காணொளிகளை பார்வையிட்டுள்ளதாகவும், அவ்வாறான ஒரு ஊடகத் தளமொன்றினூடாக தனது கிராம மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பாக மக்களை அறியச்செய்ய எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டதுடன் இதனூடாக தனது எதிர்கால சந்ததியினரின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என தான் எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

பல இளைஞர்களுக்கு, அவர்களின் பெற்றோரின் வேலை சூழ்நிலைகள் நேரடியாக அவர்களின் சொந்த அபிலாசைகளை தெரிவிக்கின்றன. நேர்காணலில் பங்கேற்றவர்கள், தமது பெற்றோர்களின் பெருந்தோட்டங்களில் வேலை செய்த அனுபவங்கள் மற்றும் வேலையின் வரலாறு மற்றும் போக்குகளைப் பிரதிபலித்தார்கள். பெரும்பாலானவர்களின் பெற்றோர் தற்போது பெருந்தோட்டங்களில் பணிபுரிவதில்லை என்பதுடன் சிலரது பெற்றோர் மாத்திரம் பணிபுரிபவர்களாக இருந்தனர். அவர்களில் பெரும்பாலானவர்களது பெற்றொரின் பெற்றோர்களே இவ்வாறாக பெருந்தோட்ட எல்லைகளுக்குள் வேலை செய்தவர்களாக இருந்தார்கள் என்பதுடன் அவர்களே இவ்வாறாக பணிபுரிந்த இறுதி சந்ததியினராகவும் இருந்தனர். இது தேயிலைக் கைத்தொழில் துறையின் மெதுவானதும் நிலையானதுமான தேய்வினை வெளிக்காட்டக்கூடிய ஒரு குறிகாட்டியாகும். இந்த ஆவணப்படுத்தலுக்காக



நேர்காணலில் பங்கேற்றவர்கள் இவ்வாறாக தேயிலைக் கைத்தொழில் துறையிலிருந்து விலகிச் செல்லும், மற்றும் இந்தக் கைத்தொழில் துறையில் பாரியதொரு வீழ்ச்சிப் போக்கினைக் காட்டக்கூடிய சந்ததியினரின் ஒரு பகுதியாகும்.

தெரணியகலையைச் சேர்ந்த இளம் பேச்சாளர்களின் பெற்றோர் இன்றும் தோட்டங்களில் பல்வேறு தொழில்களில் ஈடுபடுகின்றனர். இறப்பர் மற்றும் கருவா பயிரிடுவதற்காக தோட்டங்கள் மாறிய ஆண்டுகளில், ஒரு தனிநபரிடமிருந்து குறைந்த வேலை தேவைப்படுகிறது என்பதுடன் குறைந்த சம்பளமே வழங்கப்படுகின்றது. இதன் காரணத்தினால் பெற்றோரும் தினசரி கூலி வேலைகளில் ஈடுபடுகின்றனர். மேலும் அவர்களில் பலரும் வேலைவாய்ப்புக்களுக்காக வெளிநாடுகளுக்கும் சென்றுள்ளனர்.

புதிய சந்ததியினர் பெரும்பாலும் பெருந்தோட்டங்களுக்கு வெளியே வேலைகளைச் செய்வதில் அதிக நாட்டம் கொண்டவர்களாக உள்ளமையினால், இப்பெற்றோர்களே பெருந்தோட்டங்களில் தொழிலாளர்களாகப் பணிபுரிந்த இறுதி சந்ததியினராவர்.

நகர்ப்புறங்கள் மற்றும் வெளிநாடுகளில் வேலைவாய்ப்புக்களைத் தேடிச் சென்றுள்ள தமது வீடுகளிலிருந்து வெளியே தங்கி வேலைகளில் ஈடுபடக்கூடிய பெற்றோர், இளைஞர்களின் மீது நேரடியான தாக்கத்தை செலுத்துகின்றனர். பெரும்பாலும் குடும்பத்தில் மூத்த சகோதரர் அல்லது சகோதரி தனது இளம் சகோதர சகோதரிகள் மற்றும் அவர்களது முதியவர்களான பெற்றோர்களை பராமரிக்கவேண்டிய பொறுப்புக்களை ஏற்கவேண்டிய நிலைமை காணப்படுகின்றது.



# சமூகப் பிரச்சினைகள்

மலையகத் தமிழர்கள் என்ற அடையாளத்தின் அடிப்படையில் இளைஞர்கள் அரசிடமிருந்தோ, முதலாளிகளிடமிருந்தோ அல்லது தனிநபர்களிடமிருந்தோ தாம் எதிர்கொள்ளும் பாரபட்சங்கள் குறித்து பல கருத்துகளைக் கொண்டிருந்தனர்.



**“**

**முதலாளிகளாலும் பெருந்தோட்டத்துக்கு வெளியில் உள்ள மக்களாலும் நாம் ஒரு குறிப்பிட்ட முன் அனுமானத்துடன் நோக்கப்பட்டோம். அதாவது, மலையகத் தமிழர்களாகிய எம்மால் வேலையைச் செய்ய இயலாது அல்லது எமக்கு அந்த இயலுமை இல்லை என ஒரு அனுமானம் அவர்களுக்கு இருக்கிறது.**

- தெரணியகல -

தினக்கூலி வேலைகளில் தம்முடன் பணிபுரிபவர்களில் முழுமையான கல்வி கற்றவர்களும் உள்ளதாக தெரணியகல பிரதேசத்தில் பதிலளித்தோர் குறிப்பிடுகின்றனர். போதிய வாய்ப்புகள் இன்மை மற்றும் அவர்களுக்குத் தொழில் ஒன்றை வழங்க மக்கள் விரும்பாமையே பலரை இந்த நிலையில் வைத்திருக்கின்றன.

சமூகச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள் தங்கள் சமூகம் தொடர்பில் குறிப்பிட்ட பார்வைகளைக் கொண்டிருந்தனர். சமூக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சில பதிலளிப்பாளர்கள் தமது சமூகத்திலுள்ள மக்கள் அநீதிக்கு எதிராகவோ அல்லது அவர்களது உரிமைகளுக்காகவோ பேசுவதில்லை என்று குறிப்பிட்டனர். உதாரணமாக, அவர்கள் வசித்த லயன் அறைகள் தங்களுடைய குடியிருப்பாக இருந்தும் அது தமக்குச் சொந்தமானதல்ல என்பதை அனைவரும் புரிந்து வைத்திருந்தபோதும், நிர்வாகத்திடமோ அல்லது உள்ளூராட்சி நிறுவனங்களிடமோ இது குறித்து என்ன செய்ய முடியும் என்று கேட்பதற்கு யாரும் தயாராக இல்லை. ஏனைய சமூகங்கள் தங்கள் உரிமைகளைக் கேட்கும்போது மலையகத் தமிழர்கள் அந்த அளவுக்கு அதனைச் செய்யவில்லை என அவர்கள் உணர்ந்தனர். ஆனால் அவர்கள் அதற்கான காரணங்களை விவரிக்கவில்லை.





# முடிவுரை

மலையகத் தமிழ் சமூகம் குறித்த அறிக்கைப்படுத்தல் வரலாற்றில் அவர்கள் எதிர்கொண்ட அவலங்கள் மற்றும் தற்போதைய போராட்டங்கள் தொடர்பில் கவனம் செலுத்துகிறது. அவர்களைத் தொடர்ச்சியாக ஒதுக்கி வைக்கும் இந்த முறைமை ரீதியான தோல்விகளை ஆவணப்படுத்தி வைப்பது அவசியம். இருப்பினும், கதை முடிவடையவில்லை. அரசியல் நடவடிக்கையின் அடிப்படையில், அதை விட முக்கியமாக, அன்றாட வாழ்க்கையிலும் எதிர்காலத்திற்கான தெரிவுகளில் பெரும் எதிர்ப்பு உள்ளது.

மலையகத் தமிழர்கள் தமக்குள்ளேயே பல்வேறு கதைகளையும் யதார்த்தங்களையும் கொண்ட ஒரு சமூகம் என்பது இந்த அறிக்கையின் முக்கியமான கற்றல்பேறு ஆகும். நேர்காணல் செய்யப்பட்ட இளைஞர்கள், ஒரே மாதிரியான முறைமைப்படுத்தப்பட்ட அநீதிகளையும் தடைகளையும் எதிர்கொண்டாலும், எதிர்காலத்திற்கான தங்கள் பாதைகளைத் வெவ்வேறு வழிகளில் தெரிவு செய்கிறார்கள்.

நேர்க்காணல் செய்யப்பட்ட இளைஞர்களில், சிலருக்கு ஏலவே குறிப்பிடப்பட்ட கல்வி முறையின் குறைபாடுகள் காரணமாக அவர்கள் விரும்பும் பாடங்களைத் தொடர இயலவில்லை. இருந்தபோதிலும், அவர்கள் தமது ஆர்வங்கள் மற்றும் உத்வேகங்களால் தூண்டப்பெற்ற பாதையைப் பின்பற்றுவதற்கு 'எந்த வழியிலேனும் முயற்சி செய்யப் போவதாக' தெரிவித்தனர்.

இன்னும் சிலர், உயர் கல்வியைத் தொடர ஒரு அரச பல்கலைக்கழகத்தில் அனுமதியைப் பெற்றுள்ளதனால் அவர்கள் தமது வெற்றி ஏற்கனவே தொடங்கிவிட்டதாகக் கூறுகின்றனர்.

ஏனைய பெரும்பாலானவர்களுக்கு, சில நேரங்களில் பெருந்தோட்டங்களில் உள்ள

அவர்களது வீடுகளிலிருந்து வெகுதூரத்தில் அமையும் வேலைகளைத் தேர்ந்தெடுப்பதும் இதில் அடங்கும். ஏனெனில் இது ஊதிய அதிகரிப்பு மற்றும் சமூக நகர்வை அவர்கள் பெருந்தோட்டத்தில்தாம் தாம் காண வேண்டும் என்ற அவசியமில்லை.

எல்லா இடங்களிலும் உள்ள இளம் பதிலளிப்பாளர்களாலும் தெரிவிக்கப்பட்ட ஒரு விடயம் யாதெனில், பெருந்தோட்டங்களில் தமது பெற்றோரும் அவர்களுக்கு முந்தைய தலைமுறைகளும் அடைந்துகொள்ளப் போராடிய கண்ணியத்துடனான வாழ்க்கையைத் தேடுகிறார்கள் என்பதாகும்.

மலையகத் தமிழர்களின் கதைகள் மற்றும் போராட்டங்களுக்கான பதில்கள் வெறுமனே அனுதாபமாக மட்டும் இருந்துவிடக்கூடாது. இந்நாட்டுக்கு இச்சமூகம் வருகை தந்து 200 ஆண்டுகள் ஆன பின்பும் அவர்கள் இன்னமும் இத்தகைய ஓரங்கட்டப்படுதலை எதிர்கொள்கின்றனர் என்பது பற்றிய குரல்கள் எழுப்பப்பட வேண்டும். அவர்களது வாய்ப்புகள் மற்றும் பாதுகாப்புகளை அணுகலை அதிகரிப்பதற்கு பொருளாதார, சமூக மற்றும் அரசியல் துறைகள் முழுவதும் நிலவும் முறைமைப்படுத்தப்பட்ட அநீதிகளுக்கு எதிராக தீர்வு காணப்பட வேண்டும்.

சமூகத்தின் ஒதுக்கப்படுதலை இவ்வளவு காலம் தொடர அனுமதித்த பல்வேறு அதிகார வடிவங்களில் இருப்பவர்களை, அதாவது, அரசியல் மற்றும் பொருளாதார நன்மைகளுக்காக மக்களின் உரிமைகள் மற்றும் நல்வாழ்வை பணயம் வைத்து அவர்களது உரிமையை மறுத்த, அவர்களது குடியுரிமையை சீர்குலைத்த இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளினதும் அரசாங்கங்கள், அவர்களுக்கு வழங்கப்படும் சமத்துவமற்ற வசதிகளுக்கான பொறுப்பைக் கைவிடும் உள்ளூர் பிரதேச சபை நிர்வாகம் இலாபத்திற்காக அவர்களது உழைப்பை சுரண்டும் தேயிலை பெருவணிகர்கள் ஆகியோரை இதற்குப் பொறுப்புக்கூற வைக்க வேண்டியது அவசியமாகும்.

இந்த இளைஞர்களது பயணங்கள் பல நூற்றாண்டுகளாக இத்தகைய அநீதிக்கு முகங்கொடுத்த ஒட்டுமொத்த மலையகத் தமிழ் சமூகமும் தமது எதிர்காலத்தை எப்படி வரையறுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் காட்டுகின்றன. அவர்களின் தெரிவுகள் மற்றும் சாதனைகளை நாம் குறிப்பிடும்போது, அவர்களது உரிமைகளை அங்கீகரித்து நிலைநிறுத்தும் ஒரு முறையான மாற்றத்திற்காகவும் நாம் குரல்கொடுக்க வேண்டும்.

புகைப்படங்கள் : செல்வராஜா ராஜசேகர்